விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 309 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 07 திங்கட்கிழமை (24.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

அனைவருக்கும்
இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
வலம்புரிக் குடும்பம்

மீன் வெட்டியதில் தவறு
## மனைவியை கத்தியால் குத்திய கணவன்
தென்மராட்சியில் சம்பவம்

(சாவகச்சேரி)

மீன் வெட்டியது தவறு எனக் கூறி மனைவியை கணவன் கத்தியால் குத்திய சம்பவம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 11

## 5 வருடமாக போதைக்கு அடிமையானதால் தன்னால் மீண்டுவர முடியவில்லை
### ஆனந்தபுரத்தில் ஹெரோயினுடன் கைதான இளைஞன் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

யாழில் 5 வருடங்களாக போதைக்கு அடிமையான இளைஞன் ஒருவர் அதிலிருந்து தன்னால் மீண்டுவர முடியவில்லை என பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் பகுதியில் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 25 வயதுடைய இளைஞன் நேற்றுமுன் 11

# அரச பொறிமுறையை மாற்ற வேண்டும்
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அரச பொறிமுறையை மாற்றியமைக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சூம் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 11

போதையின் உச்சம்
## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்
புத்தூர் மேற்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள்பாவனையால் ஏற்பட்ட இயலாமை காரணமாக விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரி 11

வீட்டிலுள்ள பொருட்களைத் திருடி
## ஹெரோயின் வாங்கிய இளைஞன் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் வீட்டிலுள்ள பொருட்களைத் திருடி விற்று ஹெரோயின் வாங்கிய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 11

### மல்லாகத்தில் ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்லாகம் பகுதியில் ஹெரோயினை பாவித்துக் கொண்டிருந்த 22 வயதுடைய 11

## யாழில் போதையை கட்டுப்படுத்த விசேட சோதனை நடவடிக்கை
யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையினைக் குறைக்க விசேட படைப்பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ் பாதுகாப்புப் படைத் 11

## பசிலுக்கு அதிகாரம் இல்லை

(கொழும்பு)

பசில் ராஜபக்ஷவினால் பாராளுமன் 11

அன்பான வாடிக்கையாளருக்கு
மகிழ்ச்சியான செய்தி
உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு விலையில் யாழ். நகரில்
மொத்தக் கொள்வனவிற்கு கழிவு
10%
பான்ஸிப் பொருட்கள், சில்வர் பொருட்கள், பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள், மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask), அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள், தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள், கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்
(13107)
சரவணபவன் பான்ஸி ஹவுஸ்
இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.
உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளமாடு பிடித்தவர்கள் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

## வேலணையில் சம்பவம்

(வேலணை)

வேலணைப் பகுதியில் களவாக மாடு பிடித்தவர்களை ஊர்காவற்துறைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று மாலைவேளை இரண்டு முச்சக்கர வண்டிகளில் வந்தவர்கள் வேலணைப் பெருங்குளப் பகுதியில் களவாக மாட்டுக்கன்றைப் பிடித்து அதனை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த ஊர் மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்க, விரைந்து செயற்பட்ட ஊற்காவற்துறைப் பொலிஸார் சம்பந்தப்பட்ட இரண்டு முச்சக்கர வண்டிகளையும் அல்லைப்பிட்டிப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

இதன் போது ஒரு முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளாக அதனை ஓட்டி வந்தவர் தப்பியோடியுள்ளார்.



மற்றைய முச்சக்கரவண்டியின் சாரதி கைது செய்யப்பட்டதுடன் கடத்தப்பட்ட மாட்டுக்கன்றும் மீட்கப்பட்டுள்ளது. (ம)

# எதிர்கால நம்பிக்கைதரும் விழாவாக அமையட்டும்



2022ஆம் ஆண்டிற்கான ஒளியின் பெருவிழாவான தீபாவளி திருநாளைக் கொண்டாடும் இந்துசமய சகோதரர்கள் அனைவர்க்கும் அன்பான தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

குடும்ப உறவுகளிலும் நட்பு வட்டங்களிலும் நடைபெறும் கொண்டாட்டங்கள் எப்போதும் மகிழ்வானவை. அன்பையும் உறவையும் வளர்ப்பவை. இந்த வகையில் ஒளியின் பெருவிழா உங்கள் குடும்ப மற்றும் நட்பு உறவுகளைப் புனிதப்படுத்தி புதியதாக்கி அன்பையும் புரிந்துணர்வையும் எதிர்கால நம்பிக்கையையும் தரும் ஒரு விழாவாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறோம்.

இருளைப் பழிப்பதை விட ஒளியை எற்றுவதே சிறந்தது என்று கூறப்படுவதை நாம் அறிவோம். ஒளியை எல்லோரும் விரும்புகிறார்கள். இருளைப் பார்த்து எல்லோரும் பயப்பிடுகிறார்கள். இருளுக்கும் ஒளிக்குமான போராட்டத்தில் ஒளியே வெல்ல வேண்டும். நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில் நன்மையே வெல்ல வேண்டும்.

**யாழ். மறை மாவட்ட ஆயர்**
**கலாநிதி ஞானப்பிரகாசம் ஆண்டகை**

# சங்கிலி கொள்ளையிட்டவர் பொலிஸாரால் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கட்டுநாயக்க - ராஜுல வீதியில் தங்கச் சங்கிலி கொள்ளையர்கள் என கூறப்படும் இருவர் மீது பொலிஸார் முன்னெடுத்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் பலத்த காயங்களுடன் நீர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீர் கொழும்பிலிருந்து குறித்த கொள்ளையர்களை, நீர் கொழும்பு வலய போக்குவரத்து பிரிவின் இரு கான்ஸ்டபிள்கள் துரத்தி வந்த நிலையில், கொள்ளையர்கள் முன்னெடுத்த துப்பாக்கிப் பிரயோகத்துக்கு பொலிஸாரும் பதில் தாக்குதல் நடாத்தியதாகவும் அதன் போதே இந்தச் சம்பவம் பதிவானதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

22 வயதான மீரிகம பகுதியைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகவும் அதே பகுதியைச் சேர்ந்த 25 வயதான ஒருவர் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

நீர் கொழும்பு நகரில், மணிக் கூட்டு கோபுரம் அருகே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பெண் ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது அருகே கடமையில் இருந்த பொலிஸ் போக்குவரத்து பிரிவின் கான்ஸ்டபில்கள் இருவர் கொள்ளையர்களை துரத்தி சென்றுள்ளனர். அவர்கள் மினுவாங்கொடை நோக்கி பயணித்துள்ள நிலையில், கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் ஆடி அம்பலம பகுதியில் வைத்து பொலிஸாரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடாத்தியுள்ளனர். இதன்போது பொலிஸார் பதிலுக்கு சுட்டதாக கூறப்படுகின்றது. (ம-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் **ச.கிருஷ்ணானந்தம்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**பரமேஸ்வரி சச்சிதானந்தம்**



அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

தோற்றம் 15.11.1939 மறைவு 16.10.2022

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
3 ஆம் அணி நட்புக்கள்

(C-5137)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



மனம் மகிழ 29 - 12 - 1934

மனம் நெகிழ 25 - 09 - 2022

அமரர் **முருகுப்பிள்ளை சின்னத்துரை (சிவப்பிரகாசம்)**
**(குகன் குடிசை)**

25.09.2022 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை **(25.10.2022)** செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் அன்னா ரது இல்லத்தில் "குகன் குடிசையில்" நடைபெற்று பொலிகண்டி சமுத்திரத் தீர்த்தத் தில் அஸ்தி கரைக்கப்படும். அன்றைய தினம் மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுச் சபிண்டீகரண கிருத்திய நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அமரரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளில் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இத்தால் அறியத் தருகின்றோம்.

**(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

"குகன் குடிசை",
பொலிகண்டி

(C-5133)

குடும்பத்தினர்

# 22ஆம் ஆண்டு நினைவில்



வாழ்வுக்காக 1960.01.08

ஓய்வுக்காக 2000.10.25

அமரர்
**கந்தப்பு தவராசா**
(பவா)

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம் - நாம் ஆற
வந்து ஒரு தரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்ததிகள் கூறும் உங்கள் நாமம்
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தே விடுங்கள் எம்மிடம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(C-5138)

நினைவுத் துயரில்
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் பகுதியில் 60 கிலோ கஞ்சா மீட்பு



(அராலி)

யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் 60 கிலோவுக்கு மேற்பட்ட கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நேற்று அதிகாலை 2 மணியளவில் மாதகல் கடற்கரையோரமாக குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கேரளக் கஞ்சாவை கடத்த பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் படகொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா மற்றும் படகு என்பன இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-104)

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

## இருவர் கைது; கோடா, ஸ்பிரிட் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பொக்கணைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 200 லீற்றர் கோடா,60 லீற்றர் ஸ்பிரிட் மற்றும் கசிப்பு தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு பொக்கணைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று இயங்கி வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைத்து பிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் கசிப்பு உற்பத்திப் பொருட்கள், கசிப்பு தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-33)

## தொடரும் வழிப்பறி

# நேற்றும் முதியவரிடம் பணம் கொள்ளை

(நல்லூர்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் முகமூடி வழிப்பறி கொள்ளையர்களினால் வீதியில் சென்ற முதியவரிடம் இருந்து 15 ஆயிரம் ரூபாய் பணம், வாள் மற்றும் கத்தி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் முதியவர் பயணித்துக் கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த முகமூடி அணிந்த நபர்கள் முதியவருக்கு கத்தி மற்றும் வாள் என்பவற்றை காட்டி அச்சுறுத்தி அவரிடம் இருந்து 15 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் அவரது ஆவணங்கள் அடங்கிய பை என்பவற்றை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளைச் சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாமையால் தாம் இரவு நேரங்களில் அச்சத்துடனேயே வீதிகளில் பயணிப்பதாகவும் உரிய தரப்புகள் வழிப்பறி மற்றும் கொள்ளை சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-33)

## அவுஸ். செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 45 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்வதற்காக உனவட்டுன பகுதியில் தங்கியிருந்த 45 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையின் உதவியுடன் ஹபராதுவ பொலிஸார் இவர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களில் ஏழுபெண்களும் மூன்று சிறுவர்களும் உள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து பேருந்தில் நேற்று முன்தினம் உனவட்டுன வந்த நிலையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (நி)

## சூழல்நேய உரங்களைப் பெற

# விண்ணப்பிக்கவும்

## நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பு

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பினைச் சேர்ந்த நெற்செய்கையாளர்கள் இலவச சூழல் நேய உரங்களைப் பெற விண்ணப்பிக்க வேண்டும் என நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறித்த நெற்செய்கையாளர்கள் கமக்கார அமைப்பிடம் விண்ணப்பப் படிவத்தை பெற்று அதனைப் பூர்த்தி செய்து கையளிப்பதன் ஊடாக சூழல் நேய உரங்களான சேதனப் பசளை மற்றும் திரவ உரங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த பதிவினை கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட ஏனைய கமக்கார அமைப்புக்களும் முன்னெடுத்து வருவதாக மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-30)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குசல் மெண்டிஸ்சின் அதிரடி ஆட்டத்தால்
# 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி



உலகக் கிண்ண இருபது-20 போட்டித் தொடரின் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் இலங்கை அணி அயர்லாந்து அணியை 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றுள்ளது.

இதற்கமைய நாணய சுழற்சியில் அயர்லாந்து அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் முதலில் களமிறங்கிய அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் பந்துவீச்சில் மஹீஷ் திக்ஷன மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

அதனடிப்படையில் இலங்கை அணிக்கு 129 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அதன்படி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 15 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 129 ஓட்டங்களை பெற்று போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் குசல் மெண்டிஸ் 68 ஓட்டங்களையும் சரித் 31 ஓட்டங்களையும் மற்றும் தனஞ்சன டி சில்வா 31 ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டனர்.

இதன் அடிப்படையில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. (நி)

## லங்கா பிரீமியர் லீக் 2022 புதிய லோகோ அறிமுகம்

LPL T20
LANKA PREMIER LEAGUE 2022

லங்கா பிரீமியர் லீக் 2022 போட்டிக்கானபுதிய லோகோவை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய லோகோ இலங்கையின் பல அம்சங்களை சித்தரிக்கிறது.

இந்த லோகோ லங்கா பிரீமியர் லீக்கின் தீவிர ரசிகரால் வடிவமைக்கப்பட்டது.

ஆக்கபூர்வமான புதிய LPL லோகோவை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட போட்டியைத் தொடர்ந்து குறித்த லோகோ தெரிவு செய்யப்பட்டது.

புதிய லோகோ முக்கியமாக "சிங்க சின்னத்தை" சுற்றி உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் போட்டியை நடத்தும் தேசத்தின் தைரியம், உறுதிப்பாடு, தைரியம் மற்றும் வலிமையைக் குறிக்கிறது.

லோகோவில் பயன்படுத்தப்பட்டுள்ள பல வண்ணங்கள், "கிரிக்கெட் ஃபீஸ்டா"வின் தொடக்கத்தை அறிவிக்கின்றன. இதனால் இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களுக்கு பொழுது போக்கையும் உற்சாகத்தையும் தருகிறது. (6)

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2022-16.11.2022

## துலாம்

**எதையும் ஆராய்ந்து அறிந்த பிறகே செயற்படும் துலாம் இராசி வாசகர்களே!**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் உங்கள் இராசிக்கே வரப்போகிறார். எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாக அமையும். செலவிற்கேற்ற வரவும் வந்து சேரும். ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை தேவை.

**துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்**

இராசிநாதனும் பலம் பெறும் இந்த நேரம் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். "சுக்கிரபலம் நன்றாக இருந்தால் வாகன யோகம் முதல் வருமானப் பெருக்கம் வரை நன்றாக அமையும்" புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பொருளாதாரத்தில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும்.

**துலாம் - புதன் சஞ்சாரம்**

சூரியன் சுக்கிரனோடு இணைந்து "புத ஆதித்ய யோகத்தையும்" "புத சுக்கிர யோகத்தையும்" உருவாக்குகிறார். எனவே வளர்ச்சி அதிகரிக்கும். வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வரலாம். ஆலயங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பணிபுரியவர்களுக்கு அலுவலகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும்.

**மிதுன - செவ்வாய் வக்கிரம்**

ஐப்பசி 18 ஆம் திகதி, செவ்வாய், வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வருமானத் தடை அதிகரிக்கும். வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். எதையும் கொஞ்சம் பொறுமையோடு செய்வது நல்லது. அதோடு செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிவதால், அர்த்தாஷ்டமச் சனி வலுவடைகின்றது. எனவே ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை.

**விருச்சிக - புதன் சஞ்சாரம்**

ஐப்பசி 23 ஆம் திகதி, புதன், தனஸ்தானத்திற்கு வரும் போது பொருளாதார நிலை உயரும். என்றாலும் விரயங்கள் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. குடும்ப உறுப்பினர் களின் கோரிக்கைகளை நிறைவேற்ற கொஞ்சம் செலவிடும் சூழ்நிலை உண்டு.

**விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 26 ஆம் திகதி, சுக்கிரன், தனஸ்தானத்திற்கு வரும் போது குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் - வாங்கல்கள் திருப்தி தரும். கடுமையாக உழைப்பதன் மூலமே காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெறுவது பற்றி சிந்திப்பீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் முடிவிற்கு வரும்.

## விருச்சிகம்

**வெற்றியை குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அவரது பார்வை தன ஸ்தானத்தில் பதிகிறது. குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் தொழில் வளம் சிறக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பொருளாதார நிலை உயரும்.

**துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 2 ஆம் திகதி சுக்கிரன் விரயஸ்தானத்திற்கு வரும்பொழுது சுப விரயங்கள் அதிகரிக்கும். இடமாற்றம், வீடு மாற்றங்களைச் சந்திப்பீர்கள். கல்யாணம், கட்டடப் பணி போன்றவை நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். ஒரு சிலருக்கு வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களில் இருந்து பணிபுரிய வாய்ப்புகள் வரலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். தொழில் வளர்ச்சி உண்டு.

**துலாம் - புதன் சஞ்சாரம்**

12 ஆம் இடத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது "விபரீத ராஜயோகம்" செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தெய்வீகப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். நல்ல சம்பவம் இல்லத்தில் நடைபெறும். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நல்ல தகவலைக் கொடுப்பர். பயணங்கள் அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, எதிர்பார்த்தபடியே இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கலாம்.

**மிதுன - செவ்வாய் வக்கிரம்**

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதே நேரம் செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிகிறது. எனவே மனக் குழப்பம் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். உடன்பிறப்புக்காகவும் உடன் இருப்பவர்களுக்காகவும் செலவிட நேரிடும். 6 இற்கு அதிபதியாக விளங்கும் செவ்வாய், அஷ்டமத்தில் வரும் பொழுது "விபரீத ராஜ யோகம்" செயற்படும். இதனால் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பொருளாதாரத்தில் திடீர் உயர்வு ஏற்படும்.

**விருச்சிக - புதன் சஞ்சாரம்**

ஐப்பசி 23 ஆம் திகதி, புதன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது அந்த ஸ்தானத்திற்குரிய ஆதிபத்யத்தை நடத்துவார். எனவே செல்வ நிலை உயரும். செல்வாக்கு மேலோங்கும். நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 26 ஆம் சுக்கிரன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் இந்த நேரம் பயணங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றம், வேலை மாற்றங்கள் ஏற்படலாம். நீண்ட தூரத்தில் இருந்து பணிபுரிய அழைப்புகள் வரலாம். பொருளாதார நிலை உயரும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வரலாம். பெண் பிள்ளைகளின் கல்யாண சீர் வரிசைப் பொருட்களை வாங்கும் வாய்ப்புகள் கைகூடும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தடையில்லாமல் மண்ணெண்ணெய் வழங்கக்கோரி

# மீனவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

(அராலி)

**தடையில்லாமல் மண்ணெண்ணெயை வழங்குமாறு கோரி காக்கைதீவு துறைமுகத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் காக்கைதீவு மற்றும் சாவல்கட்டு மீனவர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.**



போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் யுத்தம் நடந்த காலப்பகுதியில் கூட மண்ணெண்ணெய்க்கு இவ்வாறான தட்டுப்பாடு நிலவவில்லை. அந்த காலப்பகுதியிலும் நாங்கள் மிக இலகுவாக மண்ணெண்ணெய் பெற்றுக்கொண்டோம்.

காக்கைதீவு துறைமுகத்தில் 225 படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

தற்போது ஒரு படகுக்கு மாதம் ஒன்றிற்கு 30 லீற்றர் மண்ணெண்ணையே வழங்கப்படுகிறது.

எமக்கு ஒருநாள் பாவனைக்கே 50 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது.

இந்நிலையில் இந்த 30 லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு மாதத்திற்கு எவ்விதம் போதும்?

அரசியல்வாதிகள் தங்களது இருப்பினை தக்கவைத்துக் கொள்ளவும் அரசியல் இலாபங்களுக்காகவும் அடிபடுகின்றார்களே தவிர, எங்களது பிரச்சினைகளுக்கு செவி சாய்ப்பதாக தெரியவில்லை.

எமது பிரச்சினைகளை கருத்தில் கொண்டு எமக்கான சீரான மண்ணெண்ணெய் விநியோகத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (நி-104)

## தீபாவளியை முன்னிட்டு விசேட பஜனை நிகழ்வு

(அராலி)

திருநெல்வேலி, சேர்.பொன். இராமநாதன் வீதியில் இயங்கி வரும் சத்தியசாயி சேவா நிலையத்தில் தீபாவளி நன்னாளான இன்று திங்கட்கிழமை தீபாவளி விசேட பஜனை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

காலை 6.55 மணியளவில் பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து ஓம்காரம், சாயி காயத்ரி, காயத்ரி மந்திர உச்சாடனத்துடன் தீபமேற்றல், விசேட பஜனை என்பன இடம்பெறும். (நி-104)

## கிளைமோர் மீட்பு

(தருமபுரம்)

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவால் நடுநெட் புலவுப் பகுதியில் கிளைமோர் மற்றும் வயர்கள் அடங்கிய பொதி மீட்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றினை துப்புரவு செய்யும் போது குறித்த பொதி காணப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மேற்படி பொருட்களை மீட்க கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற அனுமதியை பெற்று வெடிபொருட்களை செயலிழக்க வைக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். (நி-316)

## நகர் பகுதியில் களைகட்டாத தீபாவளி வியாபாரம்



(அராலி)

தீபாவளிப் பண்டிகை தினத்திற்கு முதல் நாளாகிய நேற்று யாழ்.நகரப்பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் தீபாவளி பண்டிகையின் முதல் நாள் சனக்கூட்டத்தால் யாழ்ப்பாண நகரம் நிரம்பி வழியும் நிலையில், கொரோனாவுக்கு பின்னர் மக்கள் நடமாட்டம் குறைந்தே காணப்படுகின்றது.

புடவைக் கடைகள் மற்றும் ஏனைய கடைகளிலும் பொதுமக்களின் வரவு குறைவாக காணப்படுகின்றது.

அத்துடன் அங்காடி வியாபாரமும் எதிர்பார்த்த அளவிற்கு களைகட்டவில்லை. (நி-104)

## 6 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் முருகன் வீதியில் 6 போத்தல் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் நீண்ட காலமாக கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-104)


## இராசிபலன்


24.10.2022
ஐப்பசி 07, திங்கட்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 5.43 மணிவரை
அத்தம் பிற்பகல் 3.31 மணிவரை


சுபநேரம் -12.02-1.32 மணிவரை
இராகுகாலம்- 7.32-9.02 மணிவரை
போதாயன அமாவாசை, தீபாவளி


சந்திராஷ்டமம் -பூரட்டாதி, உத்திரட்டாதி.

வளவன்


மேஷம்
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


கடகம்
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.



துலாம்
ஒருசில வேலைகளுக்காக சற்று அலைய வேண்டி ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழும் நாள்.



மகரம்
ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், வழிபாட்டில் குதூகலம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.



சிம்மம்
குடும்பத்தில் குதூகலம் கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும்.



விருச்சிகம்
குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.


கும்பம்
மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.


மிதுனம்
பொதுக்காரியங்களில் நாட்டம் கூடும், வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கன்னி
குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


தனுசு
வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள்.


மீனம்
விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

எல்லோரும் பார்த்து இரசிக்கும் மான் போல் வாழக் கற்றுக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

## காவியத் தொடர் 09





"அளந்து பார்த்ததில் இருவரும் சமமான உயரமே இருந்தார்கள். அதோடு விடாமல் சிவனையும் திருமாலையும் நேரிலேயே கேட்டு விட்டேன். அவர்கள் என்ன சொன்னார்கள், தெரியுமா? 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவர் வாயிலே மண்ணு' என்று சொன்னார்கள்.

அவ்விதம் சொல்லி, தங்களைப் பற்றிச் சண்டை போடுகிறவர்களின் வாயிலே போடுவதற்கு இந்தப் பிடி மண்ணையும் கொடுத்தார்கள்!" என்று கூறிய வல்லவரையன், மூடியிருந்த தனது வலக்கையைத் திறந்த காட்டினான். அதற்குள்ளே ஒரு பிடி மண் இருந்தது அதை வீசி உதறினான்.

கூட்டத்திலிருந்தவர்களில் பலர் அப்போது பெரும் உற்சாகங் கொண்டு தலைக்குத் தலை தரையிலிருந்து ஒரு பிடி மண் எடுத்து, நம்பியின் தலையிலும் பட்டர் தலையிலும் வீசி எறிய ஆரம்பித்தார்கள். இந்தச் செயலைச் சிலர் தடுக்க முயன்றார்கள்.

"அடே! தூர்த்தர்களா? நாஸ்திகர்களா?" என்று சொல்லிக் கொண்டு ஆழ்வார்க்கடியான் தன் கைத் தடியைச் சுழற்றிக் கொண்டு கூட்டத்திற்குள் பிரவேசித்தான்.

ஒரு பெரிய கலவரமும் அடிதடி சண்டையும் அப்போது அங்கே நிகழும் போலிருந்தன. நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய சலசலப்பு ஏற்பட்டது.

"சூராதி சூரர், வீரப்பிரதாபர், மாறபாண்டியன் படையை வீறு கொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றிவேல் உடையார், இருபத்து நான்கு போர்களில் சண்டையிட்டு அறுபத்து நான்கு விழுப்புண்களைப் பெற்ற திருமேனியர், சோழ நாட்டுத் தனாதிகாரி, தானிய பண்டார நாயகர், இறைவிதிக்கும் தேவர், பெரிய பழுவேட்டரையர் விஜயம் செய்கிறார்! பராக்! பராக்! வழி விடுங்கள்!" என்று இடி முழங்கக் குரலில் கட்டியம் கூறுதல் கேட்டது.

இவ்வாறு கட்டியம் கூறியவர்கள் முதலில் வந்தார்கள். பிறகு முரசு அடிப்பவர்கள் வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பனை மரக் கொடி தாங்குவோர் வந்தார்கள். பின்னர், கையில் வேல் பிடித்த வீரர்கள் சிலர் கம்பீரமாக நடந்து வந்தார்கள். இவர்களுக்குப் பின்னால் வந்த அலங்கரித்த யானையின் மீது ஆஜானுபாகுவான கரிய திருமேனியர் ஒருவர் வீற்றிருந்தார். மத்த கஜத்தின் மேல் அந்த வீரர் வீற்றிருந்த காட்சி, ஒரு மாமலைச் சிகரத்தின் மீது கரியகொண்டல் ஒன்று தங்கியது போல் இருந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் சாலையின் இரு புறத்திலும் வந்து நின்றது போல் வல்லவரையனும் வந்து நின்று பார்த்தான். யானை மீது இருந்தவர் தான் பழுவேட்டரையர் என்பதை ஊகித்துக் கொண்டான்.

யானைக்குப் பின்னால் பட்டுத் திரையினால் மூடப்பட்ட சிவிகை ஒன்று வந்தது. அதற்குள் இருப்பது யாரோ என்று வல்லவரையன் சிந்திப்பதற்குள்ளே, செக்கச் சிவந்த நிறத்துடன் வளையல்களும் கங்கணங்களும் அணிந்த ஒரு கரம் சிவிகைக்குள்ளேயிருந்து வெளிப்பட்டுப் பல்லக்கின் பட்டுத் திரையைச் சிறிது விலக்கியது. மேகத்தினால் மூடப்பட்டிருந்த பூரண சந்திரன் மேகத் திரை விலகியதும் பளீரென்று ஒளி வீசுவது போல் சிவிகைக்குள்ளே காந்தி மயமான ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது.

பெண் குலத்தின் அழகைக் கண்டு களிக்கும் கண்கள் வல்லவரையனுக்கு உண்டு என்றாலும் அந்தப் பெண்ணின் முகம் பிரகாசமான பூரண சந்திரனையொத்த பொன் முகமாயிருந்தாலும் எக்காரணத்தினாலோ வல்லவரையனுக்கு அம்முகத்தைப் பார்த்தும் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றவில்லை. இனந்தெரியாத பயமும் அருவருப்பும் ஏற்பட்டன.

அதே நேரத்தில் அந்தப் பெண்ணின் கண்கள் வல்லவரையனுக்கு அருகில் உற்று நோக்கின. மறுகணம் ஒரு பீதிகரமான பெண் குரலில் 'கிறீச்' என்ற கூச்சல் கேட்டது. உடனே சிவிகையின் பட்டுத் திரை முன்போல் மூடிக் கொண்டது.

(தொடரும்...)

# ஒக்டோபர் வாசிப்பு மாதம்

## காகமும் மயிலும்

*காகம் ஒன்று மயில் இறகுகள் சிலவற்றை கண்டெடுத்தது. மயில் இறகுகளை வைத்து அது பெருமை தேட நினைத்தது. அது தனது உடலில் மயில் இறகுகளைக் குத்திக் கொண்டு மயில்களுடன் சேர்ந்து வாழ்ந்தது. ஒரு நாள் அதன் குட்டு வெளிப்பட்டது.*



*எல்லா மயில்களும் காகத்தைக் கொத்திக் காயப்படுத்திக் கலைத்தன. காயப்பட்ட காகம் தனது இனத்திடம் வந்தது. காகங்களோ "நீ உனது இனத்தை சிறுமையாக நினைத்ததால் தான் இன்று சிறுமைப்பட்டு காயப்பட்டுள்ளாய். உனது இனத்தை கேவலமாக நீ நினைத்து எம்மை ஒதுக்கியதால் இனிமேல் உன்னை நாங்கள் ஒதுக்கி வைக்கப் போகிறோம்" என்றன.*

**உன் இனத்தை உயர்வாக மதி**

# புதிர் கணக்குகள்

**எத்தனை குருவிகள்? எத்தனை பூக்கள்?**

*ஒரு குளத்தை நாடிப் பல குருவிகள் பறந்து வந்தன. அந்தக் குளத்தில் தாமரைப் பூக்கள் பல மலர்ந்திருந்தன. ஒரு பூவிற்கு ஒரு குருவி என்று அமர்ந்தன. ஒரு குருவி அமர்வதற்குப் பூ இல்லை.*

*ஒரு பூவிற்கு இரண்டு குருவிகள் வீதம் எல்லாக் குருவிகளும் அமர்ந்தன. இப்போது ஒரு பூ எஞ்சி இருந்தது. அப்படியானால் அங்கு வந்த குருவிகள் எத்தனை? அந்தக் குளத்தில் இருந்த பூக்கள் எத்தனை?*

*நான்கு குருவிகள் மூன்று பூக்கள்.*

# விடுகதைகள்

1. *வெள்ளிமாளிகையின் கதவைத் திறந்தால் தங்கம் மின்னுகிறது- கோழி முட்டை*
2. *சூடுபட்டுச் சிவந்தவன் வீடு கட்ட உதவுவான்- செங்கல்*
3. *கவிழ்த்த சட்டி மேல் குட்டிச் சட்டி- கொண்டை*
4. *மூடிய குகைக்குள்ளே செம்பவள முத்துக்கள்- மாதுளம் பழம்*
5. *கால் இருக்கும் நடக்காது, கையிருக்கும் சாப்பிடாது- நாற்காலி*
6. *வயிறு நிறைய தீனி , வாயால் தின்னுவதில்லை- நெற்கதிர்*
7. *நல்லவர் கொள்ளும் தானம், நாலு பேருக்குத் தராத தானம் - நிதானம், அவதானம்*
8. *தெருக்கரையில் உள்ள மரம், பகலில் தூங்கி இரவில் விழிக்கும் - மின்கம்பம்*
9. *தொட்டுப் பார்த்தால் பேசாமலிருக்கும் உரசிப் பார்த்தால் சீறி விடும் - தீக்குச்சி*

கு.லக்ஷிகா
யா/கோ.நா.வி

# This is a clock

Look at it's face
It has two hands
One hand is long and other is short
The long hand shows minutes
The short hand shows hours
Now the time is 8.30
The clock is  a good friend
It helps me to go to school in time




Y.kasvika,
J/ uduvil girls college

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அறம் வெல்லும் என்ற உண்மையை உணர்த்திய நாள் தீபாவளி திருநாள்

இந்து மக்களின் இனிய விழாக்களில் தீபாவளிப் பண்டிகை முதன்மையானது. நீதி நிலைக்கும் என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்காக முன்னோர் எடுத்த பெருவிழாவே தீபாவளி திருநாள் விழாவாகும்.

கொடூரமான ஆட்சி செய்த நரகாசூரனை வதம் செய்து, அறம் வெல்லும் என்ற உண்மையை இறைவன் ஞாபகம் ஊட்டிய நாளே இத்திருநாள். இத் திருநாளில் அனைவரும் திருக்கோவில்களுக்கு சென்று வழிபாடு செய்வதோடு மூத்தோரை வணங்கி நல்லாசி பெற வேண்டும்.

பழைய கோபங்களை மறந்து எல்லோரும் இன்புற்று வாழ்வதற்காக இந் நாளை பயன்படுத்த வேண்டும். இருளில் இருந்து விடிவு பெற்ற நாளாகிய தீபத்திருநாளில் அகத்தில் நல்லவற்றை எண்ணி நலமே வாழ அனைவரும் திடசங்கற்பம் கொள்வோம். எங்கள் மண்ணில் ஏதோ ஓர் இடையூறு தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. தற்போது போதைவஸ்து என்ற அரக்கனின் ஆட்சி உக்கிரம் அடைந்துள்ளது. தீபாவளி திருநாளில் அக் கொடூர சூழலில் இருந்து எம் சமூகம் காப்பாற்றப்பட வேண்டும் என அனைவரும் பிரார்த்திப்போம்.

ஆடை மாற்ற வழியின்றி அவலப்படும் ஏழைகளுக்கு இரங்குவோம். எல்லோருக்கும் உணவு கிடைக்க இந் நாளில் பிரார்த்திப்போம். இலங்கையில் உண்மையான நீதி நிலைத்திட இமைப்பொழுதும் பிரார்த்திப்போம்.

அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.

## தீபங்கள் ஒளிர்வது போல் உங்களுடைய வாழ்வும் ஒளிரட்டும் பட்டாசு வெடித்து சிதறுவது போல் உங்கள் துன்பங்கள் சிதறட்டும் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்





## துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருக வாழ்த்துக்கள்

தமிழ் மக்கள் வாழ்வில் ஒன்றிணைந்த திருநாட்களில் தீபாவளி பண்டிகை பிரதானமான இடத்தை வகிக்கிறது. எமது மக்கள் வாழ்வில் பல்வேறு விதமான கஷ்டங்கள், துயரங்களை எதிர்கொண்டு வரும் காலப்பகுதியில், ஒரு தீப ஒளியானது எவ்வாறு இருளை அகற்றுகிறதோ அதுபோலவே எமது மக்கள் வாழ்வில் சகல துயரமும் நீங்கி இன்பமான வாழ்வும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சமான வாழ்நிலை அமைந்திட வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து கொள்கின்றோம்.

இச்சமயத்தில் நாம் இயன்றவரை அதிகரித்த செலவினை தவிர்த்து தேவையுடைய மக்களுக்கு இயன்றவரை உதவியுடன் ஆதரவு வழங்குவது நமது கடமையாகவும் தேவையாகவும் உள்ளது. ஆகவே இயன்றவர்கள் இயன்றவரை உதவி, அனைவருக்காகவும் பிரார்த்திப்போம்.

சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.
சிவஸ்ரீ.ச. சாந்தரூபக் குருக்கள்.
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.



## சுபீட்சத்தின் திறவுகோலாகும் இனிய தீபாவளி

பேரண்டத்தில் சூரியக் குடும்பத்தில் மன்பதைகள் ஜீவிக்கும் பூமித்தாயின் மடியில் தீமைகள் அகன்று நன்மைகள் உருவானதை இந்துக்கள் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடி மகிழ்கின்றார்கள். தேவர்களுக்கு நரகாசூரனால் ஏற்பட்ட துன்ப துயரங்கள் நரகாசூரனை வதைத்த கிருஷ்ண பரமாத்மாவினால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.


காலந்தோறும் நரகாசூரர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள். கலியுகத்தில் என்னென்ன தோன்றும் என்று, எம் முன்னோர்கள் கணித்தவை அன்றாடம் அங்கும் இங்கும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வின்னல்கள் தீர எப்போது தான் கிருஷ்ண பரமாத்மா அவதாரம் எடுக்கப் போகின்றாரோ தெரியவில்லை.

இலங்கை மக்களின் துன்பதுயரங்கள் அந்நியச் செலாவணி என்ற வடிவில் வந்து அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. அதனை முடிவுக்குக் கொண்டுவர எவராலும் முடியவில்லை.

இவற்றையெல்லாம் மறந்து மக்கள் துன்ப துயரங்களைக்களையும் ஒரு தலைவாசலாக கருதி மக்களுக்கு சுபீட்சத்தின் திறவுகோலாக இந்த சுபகிருது வருட தீபாவளி அமைய வேண்டுமென்ற அவாவுடன் மங்களகரமான தீபாவளியை எதிர்பார்த்து அனைவருக்கும் நற்சேமங்களையும் நல்லாற்றல்களையும் சுபீட்சத்தையும் வழங்கும் என்ற எதிர்பார்ப்புடன் இனிய தீபாவளியை வரவேற்போமாக.

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர். J.P
பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்
ஆதீனகர்த்தா. தென்புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் தேவஸ்தானம்.
இந்துமதகுரு பீடாதிபதி

# தீய எண்ணங்களை அழித்தலே தீபாவளியின் உட்பொருள்



தீபாவளித் திருநாளுக்கு பல காரணங்களை, பல்வேறு சிறப்புக்களை சொல்கின்றன புராணங்கள். அவற்றில் நரகாசூரனின் கதையே பெரும்பாலும் பேசப்படுகிறது.

நரகாசூரன் பூமாதேவியின் மகன். அசுரன் இரண்யாட்சனை அழிக்க வராஹ அவதாரம் எடுத்த பெருமாளுக்கும் பூமி பிராட்டிக்கும் பிறந்தவனே நரகாசூரன்.

இவன் பிரம்மனிடம் சகாவரம் கேட்டான். அப்படியான வரத்தை தர இயலாது என்று மறுத்தார் பிரம்மன்.

எனில், "எனது மரணம் என் அன்னையால் நிகழ வேண்டும்" என்று வரம் கேட்டான். பெற்ற தாயே மகனைக் கொல்லமாட்டாள் என்ற எண்ணத்தில் இந்த வரத்தைக் கேட்டான். பிரம்ம தேவனும் வரம் தந்தார். அதன்படியே அவன் முடிவும் அமைந்தது. பூமி தேவியின் மகன் என்பதால் தான் நரகாசூரனுக்கு பௌமன் என்றும் பெயர் உண்டு.

நரகாசூரன் ப்ரக்ஜோதி ஷுபுரத்தைத் தலை நகரகாகக் கொண்டு ஆட்சி புரிந்தான். அவனுடைய தேசத்துக்குப் பாதுகாவலாக கிரிதுர்க்கம், அக்னிதுர்க்கம், ஜலதுர்க்கம், வாயுதுர்க்கம் எனும் நான்கு கோட்டைகள் இருந்தன. இந்த நான்கு கோட்டைகளையும் அழித்து நரகாசூரனை சம்ஹாரம் செய்தார் கண்ண பரமாத்மா என்கிறது திருக்கதை.

அதாவது, பஞ்சபூதங்களால் ஆன நம் உடலுக்குள் புகுந்து, தீயவற்றை விலக்கி, நமக்கெல்லாம் அருள் புரிகிறார் கண்ணன் என்பதைக் குறிக்கிறதாம் இது.

கிரிதுர்கம் - மண்: அக்னிதுர்கம் - நெருப்பு; ஜலதுர்கம் - தண்ணீர்; வாயு துர்கம்- காற்று. ஆக, நிலம், நெருப்பு, நீர், காற்று எனும் நான்கையும் சொல்லியிருப்பதால், ஐந்தாவது பூதமான ஆகாயமும் இதில் சேரும்.

பஞ்சபூதங்களால் ஆன நம் உடலில், பகவானைக் குடியேற்றவேண்டும் பகவானுக்கு நம் உள்ளத்தில் இருக்க இடம் கொடுத்தால், அவன் நமது உள்ளத்தில் உள்ள அறியாமையை நீக்குவான்; ஞான ஒளி பிரகாசிக்கும். இதுவே தீபாவளியின் உட்பொருள்.

"தீயஎண்ணங்கள் தான் நரகன். அவன் குடியிருக்கும் இடமே நம்முடைய உடல். இந்த மாயாவியை அழித்து, தானாக ஆவது- அதாவது, ஆத்ம ஜோதியாகத் திகழ்வதே தீபாவளி" என்கிறார் பகவான்ரமணர்.

ஜோதிமயமான ஸ்வாமியை இல்லத்தில் வைத்து வழிபட வேண்டும் என்பதைக் குறிக்கவே, தீபங்களை ஆவளி (வரிசை)யாக வைத்து, வழிபடுகிறோம். இதன் காரணமாகவே தீப ஆவளி என்பது தீபாவளி என்றானது. இதையே, திருமகள் தீபாவளி என்றும் லட்சுமி தீபாவளி என்றும் சொல்வர்.

நரகாசூரனை அழிக்க கண்ணன் சென்றபோது, பாணாசூரன் முதலான அசுரர்கள் பலர், திருமகளான லட்சுமி தேவியைக் கவர்ந்து வருவதற்காகப் புறப்பட்டனர்.

அவர்களின் உள்நோக்கத்தை அறிந்த லட்சுமிதேவி, அங்கே எரிந்து கொண்டிருந்த தீபச்சுடரில் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு, அசுரர்களின் கண்களில் படாமல் மறைந்தாள். அன்றைய நாள் தான், தீபாவளி!

இதன் காரணமாகவே தீபாவளியன்று தீபங்களை ஆவளி (வரிசை) யாக ஏற்றி வைத்து, தீபத்தில் திருமகளை வழிபடுகிறோம்.

சிலர் தீபாவளியன்று புதுவருடக் கணக்கு தொடங்குவதும் இந்தத் திருமகள் வழிபாட்டை முன்னிட்டே நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுக்கூறலை உறுதி செய்ய சர்வதேசப் பொறிமுறை அவசியம்

## சிவில் சமூகம் வலியுறுத்து

(கொழும்பு)

பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும் தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கை முடிவிற்குக் கொண்டுவரவும் சர்வதேசப் பொறிமுறை அவசியம் என சிவில் சமூகப்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு. வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் டொனால்ட் லூவிடம் அவர்கள் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

அது மாத்திரமன்றி 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் இராணுவமயமாக்கலை முடிவிற்குக் கொண்டுவர அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

மேலும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற உள்ளகப் பொறிமுறைகளால் எவ்வித பலனும் கிட்டவில்லை என்றும் டொனால்ட் லூவிடம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# கொரோனா பரவல் முற்றாக நீங்கவில்லை

## சுகாதார பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸின் பரவல் முற்றாக நீங்கவில்லை என்று பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரிக்கும் தொற்றாளர்கள் பற்றி தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை மக்கள் முறையான சுகாதாரப் பழக்கவழக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# புகலிடம் கோரும் இலங்கையர்களை

## 3 ஆவது நாட்டிற்கு அனுப்ப பிரித்தானியா தீர்மானம்

(லண்டன்)

சாகோஸ் தீவுகளில் இருந்து புகலிடம் கோரி வரும் இலங்கை அகதிகள், அவர்கள் தானாக முன்வந்து இலங்கைக்குத் திரும்பாவிட்டால், அவர்களை பாதுகாப்பான மூன்றாவது நாட்டிற்கு அனுப்ப பிரித்தானியா தீர்மானித்துள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியாத பட்சத்தில், வேறு ஓர் அறியப்படாத நாட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக ஏசியன் நியூஸ் இன்டர்நேஷனல் தெரிவித்துள்ளது.

மொரிஷியஸ் மற்றும் பிரித்தானியாவில் உரிமை கோரப்படும் சாகோஸ் தீவுக்கூட்டத்தில் உள்ள ஒரு தீவான டியாகோ கார்சியாவில் உள்ள முகாமில் குறைந்தது 120 இலங்கையர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

இதுவரை 60 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தாமாக முன்வந்து நாடு திரும்பியுள்ளதாக பிரித்தானிய வெளி விவகார அமைச்சர் ஜெஸ்ஸி நோர்மன் அண்மையில் பாராளுமன்றில் தெரிவித் திருந்தார். (நி)

# அரசியலில் இருந்து மகிந்த ஓய்வு பெற வேண்டும்

## எதிர்கட்சித் தலைவர் வலியுறுத்து



(கொழும்பு)

"உடல் பலமும் மன வலிமையும் குறைந்துள்ளதை மகிந்த ராஜபக்ஷ உணர்ந்து. மக்கள் நிராகரிக்க முன் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும்." என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

ராஜபக்ஷக்களின் அடிமையாக வாழ்ந்த வாழ்க்கையை விட்டொழிக்க மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராஜபக்ஷவினர் இன்னும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர்.

அவ்வாறான நிலைமை ஏற்பட இடமளிக்காமல் பாதுகாப்பது மக்களின் பொறுப்பு.

தமது குடும்பத்தில் ஒருவரை மீண்டும் ஜனாதிபதியாக்க முயல்கின்றனர். இது மீண்டும் நாட்டை அழிப்பதற்கான முயற்சியாகும்.

எந்த மனிதருக்கும் எந்த வேலையும் செய்ய முடியாத காலம் வரும். எனவே , உடல் பலமும் மனவலிமையும் குறைந்துள்ளதை மகிந்த ராஜபக்ஷ உணர்ந்து. மக்கள் நிராகரிக்க முன் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும் என சஜித் தெரிவித்தார். (நி)


## அறிவித்தல்

**நல்லூர் பிரதேசசபை-நல்லூர் உப அலுவலகம் திருநெல்வேலி**

**ஆதனப் பெயர்மாற்றம்**

**ஆதன இல 825, 827 கண்டி வீதி இடது பக்கம் வட்டாரம் 10**

ஆதன இல 825,827 கண்டி வீதி வட்டா்ரம் 10 இல் அமைந்துள்ள ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் P.சீனித்தம்பி எனும் பெயரில் காணப்படுகின்றது.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று சிவியதொரு இறை செம்மணிகரை வளவு உறுதிப்படி நிலபர 2 குளி 15.24 உத்தரவு பெற்ற அளவையாளர் ந.நாகேஸ்வரன் 29-07-2003 ம் திகதியில் அளந்து பிரிவிட்டு வரைந்த 363 ம் இலக்கப்படத்தில் துண்டு 2 எனக்காட்டப்பட்டுள்ளது.இதன் எல்லைகளாக வடக்கு- ஜோசப்புவின் ஆதனம் கிழக்கு-பாதை தெற்கு-கண்டி வீதி

மேற்கு-குறித்த படத்தில் துண்டு எனச்சுட்டப்பட்ட பாகம் இவ் ஆதனமாவது 1975ம் ஆண்டு வெளிப்படுத்தல் உறுதியின் படி சீனித்தம்பி திலகேந்திரராஜாவின் பிதா காலஞ்சென்ற பாலன் சீனித்தம்பி என்பவர் அந்தோனிப்பிள்ளை பஸ்ரியம்பிள்ளை பெனடிக்ற் ஆகியவரிடமிருந்து கொள்வனவு செய்திருந்ததென்றும் 1982 பாலன் சீனித்தம்பி காலமாகிவிட ஏக வாரிசான சீனித்தம்பி திலகேந்திரராஜாவினை இவ் ஆதனம் வந்தடைந்தது என குறிப்பிட்டுள்ளார். இவ்வாதனத்தின் உறுதியானது இடப்பெயர்வு சூழ்நிலை காரணமாக தொலைந்து விட்டது எனவும் அதன் இணைப்பிரதியை காணிப்பதிவகத்தில் பெற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ் ஆதனத்தினை சீனித்தம்பி திலகேந்திரராஜாவும் பெண் மேரி விக்றோறியாவும் என்ற தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு விண்ணப்பித்துள்ளதால் இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது உரிமைகோரின் பத்திரிகையில் விளம்பரம் செய்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாக ஆட்சேபனை தெரிவிக்குமாறும் அவ்வாறு எவரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சீனித்தம்பி திலகேந்திரராஜாவும் பெண் மேரி விக்றோறியாவும் என்ற பெயரில் பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இப் பெயர்மாற்றத்தால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**

**நல்லூர் பிரதேச சபை**

(C5124)



## சேவைநலன் பாராட்டும் மணிவிழா நல்வாழ்த்தும்



செல்வி. **விஜயகுமாரி முருகேசு**

(BA{Eco}, Dip in Edu), SLTS-I

**சேவை விபரம்**

**1990-1993 முகாமைத்துவ பயிலுநர்**

**முல்லைத்தீவு கச்சேரி**

**18.01.1993-26.01.2014**

**யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்**

**27.01.2014-23.10.2022**

**யா/வட்டு இந்துக் கல்லூரி**

எமது கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி 24.10.2022ல் தனது மணிவிழா அகவையில் கால்பதிக்கும் ஆசிரியை

செல்வி. **விஜயகுமாரி முருகேசு**

அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு அவர் தமது ஓய்வுக் காலத்தில் நலமாக வாழ வேண்டும் என நடராஜப் பெருமானை பிராா்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க பல்லாண்டு! வாழ்க நலமுடன்

**வாழ்த்துவோர்:**

**பாடசாலை நலன்புரிக் கழகம், யா/ வட்டு இந்துக் கல்லூரி**

(13230)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீ பிறருக்கு எதைக் கொடுக்கிறாயோ அதை உனக்கே கொடுத்துக்கொள்கிறாய்.

– கீதை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீபாவளித் திருநாளில் நரகாசுரனாக நிற்பது முறையோ!

இன்று தீபாவளித் திருநாள். உலகமெங்கும் உள்ள இந்து மக்கள் தீபாவளித் திருநாளில் காத்தற் கடவுளாகிய கிருஸ்ண பரமாத்மாவை வழிபடுவர்.

நரகாசுரன் என்பான் ஆணவம் தலைக்கேறி அகந்தை கொண்டு தேவர்களுக்கு துன்பம் இழைக்கலானான்.

நரகாசுரனின் கொடுமை தாங்கமுடியாமல் தேவர்கள் நாராயணனிடம் முறையிட, அவர் நரகாசுரனை வதம் செய்து தேவர்களைக் காத்தருளினார் என்பது புராணங்கள் கூறும் கதை.

உண்மையில் தீபாவளி என்பதன் தத்துவம் அற்புதமானது.

அசுரத்தனம் என்பது மனிதர்களிடம் இருக்கக்கூடிய ஆணவமும் அகந்தையுமாகும்.

ஆணவம் கொண்டவர்கள் தங்களைவிட ஆள் இல்லை என்ற மமதை கொண்டவர்கள். அதேநேரம் ஆணவம் என்பது இருள் மயமானது.

ஆணவம் எனும் இருளை அழிக்க வேண்டுமாயின் அங்கு ஒளியேற்ற வேண்டும்.

இங்கு ஒளி என்பது இறைவனின் திருவருளாகும்.

ஆக, இறைவனை எம் இதயத்தில் இருத்தும்போது ஆணவமாகிய இருள் நீங்கி ஒளி பிரகாசிக்கும்.

இதனையே தீபாவளித் திருநாள் உணர்த்தி நிற்கிறது.

எனினும் தீபாவளித் திருநாளில் எவ்வளவு மதுப்போத்தல்களை விற்க முடியும் என்ற கணக்கெடுப்பே இலங்கையில் நடந்தாகிறது.

உண்மையில் தீபாவளி என்பது இந்துக்களின் புனிதமான நாள் எனும்போது, அன்றைய தினம் மதுபானச்சாலைகளை மூடி விடுவதுதான் நியாயமானது.

அதாவது புத்த பிரான் பரிநிர்வாணமடைந்த பௌர்ணமி தினத்தில் மதுபானச்சாலைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் மூடப்படுவதுபோல, தீபாவளித் திருநாளிலும் மதுபானச்சாலைகளும் இறைச்சிக் கடைகளும் மூடப்பட வேண்டும்.

ஆனால் இலங்கை அரசாங்கமும் இந்து கலாசார அமைச்சும் ஏன்? நம் தமிழ் அரசியல் தரப்புகளும் இது தொடர்பில் மௌனமாக இருந்து விடுகின்றன.

எனினும் இது விடயத்தில் மலையகப் பாராளுமன்ற உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானைப் பாராட்ட வேண்டும்.

தீபாவளித் தினத்தன்று மலையகத்தில் மதுபானச்சாலைகளை மூடுவதற்கு உத்தரவிடுமாறு அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையில் மலையகத்திலுள்ள மதுபானச்சாலைகளைத் தீபாவளி தினத்தில் திறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இலங்கை அரசாங்கம் அனைத்துச் சமயங்களையும் சமமாக மதிக்குமாயின் தீபாவளித் தினத்தில் நாடு பூராகவும் மதுபானச்சாலைகளையும் இறைச்சிக் கடைகளையும் பூட்ட வேண்டும்.

ஆனால் அதனைச் செய்யாமல் மதுபானச்சாலைகளைத் திறந்து தீபாவளித் திருநாளில் கனிசமானவர்களை நரகாசுரனாக ஆக்குகின்ற வேலையை அரசாங்கம் செய்கிறது.

இதுதான் மிகப்பெரும் மனவருத்தமாக உள்ளது.

# ஜனாதிபதியின் திருமலை மூலோபாயம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மீறும் செயல்

கலாநிதி. தயான் ஜயதிலக

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய அறிவிப்பின் பிரகாரம் திருகோணமலை மூலோபாயம் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால், அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினை மீறுவதாக அமையும் என்று கலாநிதி. தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினை மீளாய்வு செய்வது தொடர்பில் இந்தியாவுடன் பேசுவதற்கு தயார் என்று இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளமையானது ஆபத்தான சமிக்ஞை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக் குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்து வரும் இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப்பூர்வமான வசிப்பிடங்கள் என்பதையும் அங்கீகரிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருக்கும் திருகோணமலை மூலோபாயம் அமுலாக்கப்படுமாக இருந்தால், திருகோணமலையில் இன விகிதாசாரம் மாற்றியமைக்கப்படும்.

அத்துடன் திருகோணமலை தமிழர்களின் ஏனைய வரலாற்றுப்பூர்வமான வசிப்பிடத்துடன் தொடர்பற்ற வகையில் அமைவதற்கான சூழல்களும் இல்லாமலில்லை.

ஆகவே, திருகோணமலை மூலோபாயம் அமுலாக்கப்படுவதானது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினை மீறும் செயற்பாடாக அமைகின்றது. அவ்வாறு இந்திய - இலங்கை ஒப்பந்தம் மீறப்படுகின்றபோது, அது பற்றி இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்காமல் இருப்பதற்கே இந்தியாவையும் இணைத்து திருகோணமலை மூலோபாயத்தினை முன்னெடுப்பதற்கு ரணில் திட்டமிடுகின்றார்.

இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புக்களும் முஸ்லிம் தரப்புக்களும் சிவில் மற்றும் புத்திஜீவிகளும் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள் வேண்டும்.

அதிகாரங்களை பகிர்ந்தளிக்குமாறு கோரும் மேற்படி தரப்பினர் அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தினை அமுலாக்குவதற்கான கோரிக்கையை வலுவாக முன்வைக்க வேண்டும். அதற்கு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் இருப்பு மிகவும் முக்கியமானதாகின்றது.

எனவே அதிகாரப்பகிர்வில் தற்போதைக்கு அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக அதனை தக்கவைத்துக் கொள்வதற்கு விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது என அவர் தெரிவித்தார். (நி)

# புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக பேருந்துகளில் பயணச்சீட்டு

(கொழும்பு)

பேருந்துகளில் புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக பயணச்சீட்டுகளை விநியோகிப்பதற்கான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முறைமையின் கீழ் நடத்துநர் அல்லது வாகன உதவியாளர் இன்றி பயணிகளிடம் கட்டணத்தை அறவிடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்துவதாகவும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய பயணச்சீட்டு இயந்திரங்கள் பேருந்துகளில் பொருத்தப்படும்.

நடத்துநர் இன்றி அல்லது நடத்துநருடன் பேருந்துகள் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

எனினும் நடத்துநர்கள் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

குறித்த இயந்திரங்களில் கையடக்க தொலைபேசிகள், வங்கி அட்டைகள், உள்ளிட்டவற்றை பயன்படுத்தி கட்டணத்தை செலுத்த முடியும்.

இதனை விரைவில் அறிமுகப்படுத்துவதற்காக முழுமையாக தரவுகள் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

# எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

(அராலி)

சாவகச்சேரி - டச் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மதியம் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

வீட்டில் இருந்த பெண்மணி சமையல் செய்துகொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (நி-104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பிரதேச செயலகம்-நல்லூர், கல்வி அமைச்சு, யாழ்ப்பாண [illegible] சந்தி முருகேசன் வீதி, பருத்தித்துறை வீதி நல்லூர், சட்டநாதர் வீதி, கோயில் வீதி சங்கிலியன் வீதி சந்தி ஆடியபாதம் வீதி-நல்லூர், இராமலிங்கம், ஆடியபாதம் சந்தி மண்கும்பான் நீர்பாசன சபை, மண்டைதீவு கடற்படைமுகாம், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான், மண்கும்பான் விடுதியடி, பூம்புகார், வெண்புரவி நகர் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

# ஊர்காவற்துறையில் திருட்டு சந்தேகநபர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறையில் திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தின், குருக்கள் தங்கும் இல்லத்தில் உள்ள பெறுமதி வாய்ந்த பல பொருட்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் களவாடப்பட்டிருந்தன.

அதனடிப்படையில் ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவின் கீழுள்ள காரைநகர் பொலிஸ் காவல் அரண் பொறுப்பதிகாரி உபுல் செனதிரத்ன அவர்களின் தலைமையின் கீழுள்ள பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் நேற்று 22 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.


கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திருடப்பட்ட பொருட்களை கடைகளில் விற்பனை செய்திருந்த நிலையில் அந்த பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, மீட்கப்பட்ட பொருட்களுடன் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம் பற்றி சிந்திக்கக்கூடாது என்பதற்காகவே இளைஞர்கள் திசைதிருப்பப்படுகிறார்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு



**(கிளிநொச்சி)**

**எங்கள் இளைஞர்கள், மறந்தும் தங்கள் இனம் பற்றியோ, அதன் விடுதலை பற்றியோ ஒருபோதும் சிந்தித்து விடக் கூடாதென்ற ஒற்றைக் காரணத்திற்காக அவர்கள் பல்வேறு வழிகளிலும் திட்டமிட்டு திசை திருப்பப் படுகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலைப்பண்பாட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை வடக்கில் உச்சவரம்பைத் தொட்டுள்ளதாக செய்திகள் சொல்கின்றன. அந்த நிலை மாற வேண்டும் என்றால், எங்கள் குழந்தைகளுக்கும் வளரிளம்பருவ இளைஞர்களுக்கும் தங்கள் இனம் மீதும் மொழி மீதும், கலை, கலாசாரம் மீதும் ஆழ்ந்த பற்றுதல் வரவேண்டும்.

தமது சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமைகளற்ற, நசுக்கப்பட்ட இனமாக இருந்துகொண்டு தனது இருப்பைத் தக்கவைப்பதற்காய், அரச அடக்குமுறையாளர்களோடு எல்லா வழிகளிலும் போராடத் தலைப்பட்டுள்ள தமிழினத்தின் இருப்பை, அதன் மொழி, நில, கலை, கலாசார, மரபியல்களை மீள் கட்டமைப்பதன் மூலமே தூக்கிநிறுத்த முடியும் என்ற நிலை இன்று உருவாகியிருக்கிறது.

கேட்பாரற்றுக் கொன்று புதைக்கப்பட்ட ஈழத்தமிழினத்தின் எச்சங்களைக்கூட விட்டுவைக்கும் திராணியற்ற சிங்கள பேரினவாதம் நிலப் பறிப்பென்றும், சிங்கள குடியேற்றம் என்றும், மொழி, இன அடையாளப் பறிப்பென்றும், சொந்த மண்ணிலேயே நிலங்களற்ற ஏதிலிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட எம்மீது, கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் இன்னோர் அத்தியாயத்தை வலிந்து திணிக்கும் கையறு நிலையிலும், நாம் நிமிர்ந்து நிற்பதற்கு எங்களின் பண்பாட்டு அடையாளங்கள் தான் காரணம் என அவர் தெரிவித்தார். (நி)

# சிறைவாழ்வை அனுபவிக்கும் ஏனைய அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் அருட்தந்தை சக்திவேல்

(நெளுக்குளம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கொடூரம் காரணமாக மிக நீண்ட காலமாக சிறைவாழ்வை அனு பவித்துவரும் ஏனைய அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவதற்கு ஜனாதிபதி நடவ்டிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார். நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் தலையீட்டினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் கைதிகளில் எட்டு பேர் விடுதலை செய்யப்பட உள்ளதாக ஆரம்பத் தகவல்கள் ஊடகங்களில் வெளிவந்தாலும் இறுதியில் நால்வர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்வதாக பெயர் குறிப்பிட்டுள்ள ஏனையவரையும் விடுதலைக்கான தடைகளை நீக்கி அவசரமாக விடுவிக்க ஆவன செய்திடல் வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்க வேண்டும் என்பது பொதுக் கோரிக்கையாக இருக்கின்றது. அதனை ஆட்சியாளர்கள் எப்போது நீக்குவார்களோ தெரியாது என அவர் தெரிவித்தார். (நி-299)



வவுனியா தெற்கு கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களின் ஆசிரியர் தின நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளிஉதவி கல்வி பணிப்பாளர் வீ. பரஞ்சோதி தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் தி. திரேஸ்குமார், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:-சதீஸ்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 300 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 320 |
| தக்காளி | 350 | 320 | 320 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 200 |
| கோவா | 300 | 250 | 280 | 400 |
| கரட் | 280 | 400 | 400 | 450 |
| பூசணி | 200 | 180 | 200 | 200 |
| புடோல் | 200 | 250 | 220 | 250 |
| வாழைக்காய் | 200 | 140 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 450 | 550 |
| பெரிய வெங்காயம் | 260 | 240 | 220 | 250 |
| பாகற்காய் | 600 | 650 | 550 | 700 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 380 | 320 |
| லீக்ஸ் | 300 | 300 | 280 | 350 |
| பீற்றூட் | 180 | 250 | 300 | 280 |
| கறிமிளகாய் | 550 | 650 | 550 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 300 | 350 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 100 | 140 |
| தேசிக்காய் | 800 | 650 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 420 | 450 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 80 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 160 | 100 | 150 |

# வீடுதோறும் சேதனப்பசளை

## வவுனியா நகரசபையின் புதிய முயற்சி



(நெளுக்குளம்)

வீடு தோறும் சேதனப் பசளைகளுக்காக நகரசபையினால் புதிய முயற்சி ஒன்று தாண்டிக் குளம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த முயற்சியானது வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமனின் வழிகாட்டலில் தென்னம்மட்டைகள், மரக்கழிவு என்பவற்றை துகள்களாக்கி வீடுகளில் சேதனப் பச ளையை உருவாக்கி வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்கும் முகமாக பரீட்சார்த்த ரீதியாக முன்னெடுக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின்...

யாழ்ப்பாணம் - அச்சுவேலிப் பகுதியில் 40 மில்லி கிராம் ஹெரோயின், மருந்து ஏற்றும் ஊசி (சிரின்ஸ்) தேசிக்காய் என்பவற்றுடன் குறித்த இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பத்தமேனி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய குறித்த இளைஞன் போதைக்கு அடிமையான நிலையில், வீட்டில் இருக்கும் பொருட்களை திருடி விற்று, போதைப்பொருட்களை வாங்குவதாக விசாரணைகளில் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த இளைஞனை கைது செய்ததாகவும், மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-7,33,104)

## மல்லாகத்தில்...

இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது அவரது உடைமையில் இருந்த 40 மில்லிக்கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-7,33,104)

## 5 வருடமாக...

தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கோப்பாய்பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த இளைஞனை கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் போது, தான் கடந்த ஐந்து வருட காலமாக போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளதாகவும், அதிலிருந்து மீண்டு வர தன்னால் முடியாதுள்ளதால் தொடர்ந்து போதைப் பொருளை நுகர்ந்து வருவதாகவும், ஆனந்தபுரம் பகுதியிலேயே போதைப் பொருளை தன்னால் பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளதாகவும் குறித்த இளைஞன் தெரிவித்துள்ளார். (ம-7)

## விபரீத முடிவெடு...

ழுந்துள்ளார்.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தூர் மேற்கைச் சேர்ந்த சுரேஸ் துவாரகன் (வயது-20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் நீண்ட நாட்களாக போதைக்கு அடிமையானவர் என அவரது பெற்றோர் விசாரணையில் தெரிவித்தனர்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## மனைவியை...

கொடிகாமம் - தவசிகுளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சந்தைக்கு சென்று மீனுடன் வந்த கணவன் அதனை வெட்டுமாறு மனைவியிடம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் மீனினை மனைவி வெட்டிக்கொண்டிருந்தபோது வெட்டியது தவறு எனக்கூறி மீன் வெட்டிய கத்தியைப் பறித்து மனைவி மீது வெட்டியுள்ளார்.

இதன்போது மனைவி வயிறு,கை மற்றும் கால் பகுதிகளில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 31வயதான குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு கணவனின் கத்திக் குத்திற்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## அரசபொறி...

வெளிநாட்டு முதலீடுகள் இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அடுத்த சில மாதங்களில் அரசாங்கத்தின் பொறிமுறையை மாற்றியமைக்க வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## யாழில் போதை...

தலைமையகம் தெரிவித்துள்ளது

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பாவனை தொடர்பில் பலாலி பாதுகாப்புத் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கஞ்சா தொகையானது கைப்பற்றப்பட்டது.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்கு மிகவும் பிரமாண்டமான முறையில் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இளம்சந்ததியினரும் அவற்றிற்கு அடிமையாகின்ற தன்மையானது வெகுவாக அதிகரித்துள்ளது.

அந்த வகையில் இந்த துர்ப்பாக்கிய நிலையினை இல்லாதொழிப்பதனை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேய சுந்தரவினுடைய தலைமையில் விசேட படைப் பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் ஊடாக யாழ். மாவட்டத்தில் போதைப் பொருள் கடத்தல்களை தடுத்தல், கைது செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தொடர்புள்ள நபர்களை நீதி முன் நிறுத்துதல் போன்ற செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

51 ஆவது காலாட் படைப் பிரிவிற்கு கீழ் காணப்படுகின்ற ஜே 150 கிராம சேவகர் பிரிவின் மாதகல் கிழக்கு பகுதியில் 513 ஆவது காலாட் படைப்பிரிவின் 16 ஆவது கெமுனு ஹேவா படையணியினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின்போது 100 கிலோக் கிராம் கஞ்சாவுடன் அதனை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக விசேட அதிரடிப் படையினரிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் இது போன்ற கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முகமாக யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்துக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் பொதுமக்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் அவை தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க் காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**பாதுகாப்பு படைத்தலைமையகம்,**
**வயாவிளான்**
**யாழ்ப்பாணம்**
**தொ: இல: 076 6907751** (ம-7,104)

## பசிலுக்கு...

ரத்தில் இனி எதனையும் செய்ய முடியாது என்பது 22ஆவது அரசியலமைப்பு திருத்தம் மீதான வாக்கெடுப்பின் மூலம் தெளிவாகி உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷவின் கருத்துக்கு எதிராகச் சென்று எம்.பிக்கள் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக தெரிவித்த அவர், பாராளுமன்றத்தில் பசிலுக்கு அதிகாரம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு வங்கிகளை நிறுவ தீர்மானம்

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும் மத வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்டு உணவு வங்கிகள் மற்றும் உணவுப் பரிமாற்ற மையங்களை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து உறுதி திட்ட முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில் இதுபற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள 14,022 கிராமிய சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. (ம-7)


**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க **உடனே பதியுங்கள்**

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-4921)

V2 Travels 0768226240 0768226244

**Skyline இன் இனிய**
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

மழை காலம் ஆரம்பித்து இருப்பதனால்
நீர்க்கசிவு பிரச்சினையால் அவதியுறுகிறீர்களா?
அப்படியானால் கவலைப்படாதீர்கள்...

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த் தொட்டி, கோவில் வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள், நீச்சல் தடாகங்கள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதத்துடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

1 சதுர அடி 150/=... இருந்து

Skyline Water Proofing (13221)

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743
www.skylineholders.com

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13108)

தொடர்பு
077 911 6983
076 755 8606


## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றிநவிலலும்



நவாலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் உயர்திரு.
**செல்லத்துரை பஞ்சாட்சரம்**
(ஓய்வுபெற்ற வட - கிழக்கு மாகாண சபை நிர்வாக அலுவலர், கணக்காளர் - யாழ். செயலகம்)

மண் மகிழ : 08.07.1935
கண் நெகிழ : 25.09.2022

எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பிரிவுத்துயர் கேட்டு தொலைபேசி, முகநூல், சமூக வலைத்தளங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு நாளை (25.10.2022) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கருவேப்புலம் வீதி,
கொக்குவில்.

(C-5135)

குடும்பத்தினர்


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13240)

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.